# நமதாண்டவரின் ஞாபகார்த்தம்

நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து,ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். (I கொரிந்தியர் 11:23-26)

1. இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்வதற்காகச் செலுத்திய (1 யோ 2:2) அவரது மகத்தான பலியை நினைவுகூரும்படி ஏற்படுத்தின இராபோஜனம் எளிமையாகவும், பொருத்தமானதாகவும் மனதை கவருகிறதாய் இருக்கிறது.
2. உலகிலுள்ள பெரியவர்கள் தங்களுடைய பெயரை அழியாமல் நிலைநிறுத்த வித்தியாசமான முறைகளை கையாளுகிறார்கள். அவர்கள் தங்களுடைய பெருமையையும், பிரதாபங்களுயுமே ஞாபகார்த்தமாக செய்வார்கள். ஆனால் நமது கர்த்தர் நமக்காக செலுத்திய அவரது பாவநிவாரண பலியை (மரணத்தை) விளக்கி நிற்கும் காரியத்தையே அவரது ஞாபகார்த்தமாக தேர்தெடுத்தார்.

3. இயேசுவின் மதிப்பீட்டின்படியும், தேவனுடைய மதிப்பீட்டின்படியும் இந்த பாவநிவாரண பலி மகா பெரிய வேலையாய் இருக்கிறது.ஆதலால் இயேசுகிறிஸ்து இதனை தமது ஞாபகார்த்தமாக ஏற்படுத்தினார்.இந்த ஞாபகார்தத்தை ஏற்படுத்தினார். இந்த ஞாபகார்தத்தை, அவரை பின்பற்றுகிறவர்களால் அவரது ஊழியத்தின் மற்ற எந்த

அம்சத்தையும்விட அதிகமாய் உயர்வாக மதிக்கக்கூடும். ஒருவேளை அவரது ஞாபகார்த்தமாக அவருடைய அதிசயமான கிரியைகளில் அல்லது வார்த்தைகளில் ஏதாவதொன்றை அடையாளப்படுத்தி வைத்திருந்தால், அதையும் அவர்கள் உயர்வாககவே மதித்து இருப்பார்கள் என்பது உண்மைதான். ஆனால் அதை உலகத்தாராலுங்கூட உயர்வாக மதிக்கக்கூடும். ஆனால் அவரது இந்த மரணத்தின் மதிப்பை அதாவது அவர் ஏற்படுத்தின இந்த ஞாபகார்த்தத்தை உலகத்தாரால் உணர்ந்து கொள்ளவோ புரிந்து கொள்ளவோ முடியாது.நாம் தேவனோடு ஒப்புரவாதலுக்கு அஸ்திவாரமாயிருக்கிற நமது மீட்கும் பொருளின் பலியான அவருடைய மரணத்தின் மதிப்பை, உண்மையாய் பிரதிஷ்டை பண்ணியிருக்குறவர்களால் மாத்திரமே புரிந்து கொண்டு மதிக்க முடியும்.

4. பிரதிஷ்டை பண்ணியிருக்கிற இந்த ஜனங்களுக்காகவே, ஞாபகார்த்த இராபோஜனம் ஏற்படுத்தப்பட்டது. ஒருவேளை யூதாஸ் அவர்களோடு இருந்தானே ! அவனுக்கும் அது ஏற்பட்டதா எனக் கேள்வி எழலாம். அங்கே ஒரு யூதாஸ் இருந்தாலும், அவன் தோய்த்த துணிக்கையை வாங்கின பின்பு இராபோஜனம் முடிவதற்கு முன்பே மற்றவர்களை விட்டு சென்றுவிட்டான் என்பது குறிப்பிடத்தக்கது.

5. இது, சந்தேகமில்லாமல் ஒரு அடையாளமாயிருக்கிறது. சுவிசேஷ யுகத்தின் முடிவில் யூதாசை போன்ற ஜனங்கள் அதாவது மீட்கும் பொருளின் பலியை சரியானபடி மதிக்காதவர்கள் தங்களுடைய ஓட்டத்தை முடிப்பதற்கு முன்பே பிரதிஷ்டை செய்திருக்கிறவர்களின் ஐக்கியத்திலிருந்து விளக்கப்படுவார்கள். அப்படிப்பட்டவர்கள் விரட்டப்படதக்கதாக அவர்களுக்கு சத்தியத்தின் தோய்த்த துணிக்கை அவ்வளவு பலமானதாகிவிடும் (யோ 1:9) என்பதை அறிகிறோம்.

**நீங்கள் கர்த்தருடைய மரணத்தை தெரிவிக்கிறீர்கள்:**

6. இயேசு எருசலேமில் தான் நிறைவேற்றப்போகும் மரணத்தைக் குறித்து பேசினார் என்று அப்போஸ்தலர்கள் தெரிவிக்கிறார்கள்.(1 கொரி 11:23-26) நமது மீட்பரின் சரீரம் பிட்கப்பட்ட இந்த மரணத்தைத்தான் இயேசு ஏற்படுத்திய ஞாபகார்த்த இராபோஜனம் அடையாளமாக காட்டுகிறது. அதின் புண்ணியத்திலும், ஜீவனிலும், நித்தியஜீவனை பெறப்போகிறவர்கள் இதில் பங்கு கொள்ளவேண்டும். இந்த முக்கியமான விஷயத்தில் "ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்".

7. எவ்விதமாக, நீரில் மூழ்கி எடுக்கிற ஞானஸ்நானத்திற்கு அடையாளமாயும் மாத்திரம் இருக்கிறதோ, அப்படியே இந்த இராபோஜன அனுசரிப்பும் மிகவும் முக்கியமான மெய்யான விருந்துக்கு அடையாளமாய் மாத்திரம் இருக்கிறது. அனுதினமும், மீட்கப்பட்ட அவரது சரீரத்தின் மூலமும், சிந்தப்பட்ட அவரது இரத்தத்தின் மூலமும், நமது நித்தியஜீவனுக்கு உத்திரமாதமளிக்கிற கிறிஸ்துவின் பலி புண்ணியத்தை நமக்கு சொந்தமாக்கிக் கொள்ளுகிறதே அந்த மெய்யான விருந்தாய் இருக்கிறது.

**அப்பமும் பாத்திரமும்:**

8. இயேசு செய்து முடித்திருக்கும் பலியை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு, இயேசுவாகிய பூரண மனிதன் பெற்றிருந்ததும், நமக்கு கொடுத்ததுமான புண்ணியத்தையும், பரிபூரணத்தையும், உரிமைகளையும் நமக்கு சொந்தமாக்கி கொள்ளும்போது, ஜீவ அப்பத்தால் நமது இருதயங்களை போஷிக்கிறோம். இதுவே மெய்யான (விருந்தாகிய) ஜீவ அப்பமாயிருக்கிறது. இதை புசிக்கிறதால் நித்தியஜீவன் உண்டு. இதைத்தான், இதில் சரியாகவும் நுண்ணறிவுடனும் பங்கு கொள்ளுகிற எல்லோருக்கும் இந்த சொல்லர்த்தமான அப்பம் தெரிவிக்கிறது. இவை பாவம், மரணம் இவைகளின் அடிமைத்தனத்திலிருந்து ஆதாமையும் அவனுடைய சந்ததியையும் மீட்கிற மீட்கும்பொருளின் ஞாபகார்த்தமாகும்.

9. மற்றொரு கருத்து: இந்த அப்பம் புளிப்பில்லாததாய் இருக்கிறது. புளித்தமா அழிவைக்குறிக்கும். இது கெட்டு அழியும் அம்சமுடையது. ஆகையால் இது பாவத்திற்கு, மனுஷரில் பாவம் உண்டுபண்ணுகிற கெட்டு அழிந்துபோகும் தன்மைக்கும், மரணத்திற்கும் அடையாளமாய் இருக்கிறது. ஆகையால் அந்த புளிப்பு இல்லாத அப்பமாகிய அடையாளம் நம்முடைய கர்த்தராகிய இயேசு பாவமில்லாதவர் என்றும் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி என்றும் தெரிவிக்கிறது. அவர் "பரிசுத்தர், குற்றமற்றவர், மாசில்லாதவர்" அவர் ஆதாமினுடைய பரம்பரையிலிருந்தோ அல்லது எந்த உலகப்பிரமான தகப்பனிடமிருந்தோ தன்னுடைய ஜீவனை அவர் பெற்றிருந்தாரேயானால், ஆதாமின் மரணத்தினால் கறைபட்டுயிருக்கிற மற்ற மனிதரைப்போலவே இருந்திருப்பார். ஆனால், அவருடைய ஜீவன் உயர்வான, பரம சுபாவத்திலிருந்து மாசற்றதாய் வந்தது. பூமிக்குரிய நிலைக்கு அது மாற்றப்பட்டது. ஆகையால் அவர் "வானத்திலிருந்து வந்த அப்பம்" (யோ 6:41) என்று அழைக்கப்படுகிறார்.

10. ஆகையால், தேவன் நமக்கு கொடுத்து இருக்கிற சுத்தமான, புளிப்பில்லாத, மாசில்லாத அப்பத்தை உயர்வாக மதித்து புசிப்போமாக. அதாவது அவருடைய சத்தியத்தை புசித்து கிரகித்துக் கொண்டும், விசுவாசத்தினாலே அவருடைய நீதியை நமதாக்கிக் கொண்டும், இவ்விதமாக நாம் அவரை புசிப்போமாக. அவரை நமது வழியும் ஜீவனுமாக அங்கீகரிப்போமாக.

11. திராட்சைப்பழ இரசம் நம்முடைய கர்த்தரால் கொடுக்கப்பட்ட பலியான ஜீவனைக் குறிக்கிறது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள். இது பாவமன்னிப்பு உண்டாக்கும்படி அநேகருக்காக சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது." என்று இயேசு கூறினார். இந்த இரத்தம் மரணத்திலே கொடுக்கப்பட்ட அவரது ஜீவனுக்கு அடையாளமாய் இருக்கிறது. (மத் 26:27,28)

12. பாவம் பறித்துக்கொண்டு ஆதாமின் சந்ததியின் ஜீவனுக்காக அவர் தன்னுடைய ஜீவனை மீட்கும் பொருளாக (பலியாக) கொடுத்தார்.

அதினாலே, புதுஉடன்படிக்கைபடி, விசுவாசத்தினாலும் கீழ்ப்படித்தலினாலும் மனுஷருக்கு ஜீவனுக்குரிய உரிமை கிடைக்கிறது. (ரோ 5:18,19) சிந்தப்பட்ட அந்த இரத்தமே எல்லோருக்கவுமுள்ள மீட்கும் பொருளின் கிரயமாகும். அது நம்முடைய இரட்சகராலேயே எல்லோருக்காகவும் கொடுக்கப்பட்டது. ஆனால் இதில் பணம் பண்ணுங்கள் என்று சொல்லி அவர் சீஷர்களுக்குப் பாத்திரத்தைக் கொடுத்த செய்கை, அவருடைய பாடுகளில் பங்காளிகளாவதற்கு அல்லது அப்போஸ்தலனாகிய பவுல் விவரிக்கற பிரகாரம் "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை" நிறைவேற்றுவதற்கு சீஷர்களுக்கு அவர் விடுத்த ஓர் அழைப்பாகும். (கொலோ 1:24)

13. அது, அவருடைய அவமரியாதையிலும் மனுஷீகத்தின் மரணமாகிய அவருடைய பலியிலும் சபை பங்கு கொள்வதை உருவகப்படுத்துகிறது. இதனை குறிக்கும் வகையில் நம்முடைய கர்த்தர் இந்த முக்கியத்துவத்தை பாத்திரத்திற்கு கொடுத்தார். உதாரணமாக, அவருடைய சிங்காசனத்தின் இடது வலது பாரிசத்தின் மகிமையில் உட்கார வாக்குக்கொடுக்க வேண்டுமென்று அவருடைய சீஷர்களில் இரண்டு பேர் அவரிடம் கேட்டபோது, அவர், நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்கு தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்க உங்களால் கூடுமா? என்று கேட்டார். அவர்களுடைய மனப்பூர்வமான உறுதிமொழியை கேட்டு, "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்" என்று அவர் சொன்னார். இதிலிருந்து கிறிஸ்துவின் பாடுகளில் சபை பங்கு கொள்ளுதலையும் அதனை உருவக படித்திக்காட்டும் பாத்திரத்தையும் அறிந்து கொள்கிறோம். மேலும், இது திராட்சைப்பழ இரசம் (திராட்சைப்பழத்தினுடைய மறைவெளிவரும்வரை பொருளில் உள்ள இரத்தம்) வெளிவரும்வரை பிழியப்படுவதை மாத்திரமில்லாது பருகியபின் கிடைக்கும் புத்துணர்ச்சியையும், அதாவது இராஜ்யத்தில் அவரோடு நவமானதாய் பானம் பண்ணுதலையும் தெரிவிக்கிறது.

**அவர் வருமளவும்**

14. இந்த சொல்லின் முழு முக்கியத்துவம் என்ன? "அவர் வருமளவும்" என்ற இந்த அப்போஸ்தலனின் சொற்றொடர், நம்முடைய கர்த்தராகிய இயேசுவினுடைய மரணத்தை ஞாபகார்த்தமாக கொண்டாட ஒரு காலவரம்பை ஏற்படுத்தியது என்று நாம் எண்ணக்கூடாது. ஏனெனில் ஞாபகார்த்த இராபோஜனத்தை ஏற்படுத்திய நமது கர்த்தர், அது ஆசரிக்கப்படுவதற்கு ஒரு காலவரம்பை வைக்கவில்லை. சரியாக கூறு மிடத்து, அதை சில வருஷங்களுக்குத்தான் அனுசரிக்க வேண்டுமென்றில்லாமல், தொடர்ந்து அனுசரிக்கப்பட வேன்றுமென்ற கருத்தை வலியுறுத்தவே கர்த்தருடைய இரண்டாம் வருகை வரைக்குமென்று அப்போஸ்தலன் காண்பிக்கிறார். அதாவது, அப்போஸ்தலன், கர்த்தருடைய சபை அல்லது விண்ணரசு (இராஜ்ஜியம்) உலகை ஆளுவதற்காகவும் கூட்டிச்சேர்க்கப்படுதலையும், கிறிஸ்துவோடு உயர்த்தப்படுதலையும் இரண்டாம் வருகையில் சேர்த்திருக்கிறார்.

15. கி.பி 1878ல் அவர் தன்னுடைய பெரிய வல்லமையை உபயோகிக்க ஆரம்பத்திலிருந்து (வெளி 11:17) இராஜ்ஜியம் ஆரம்பமானது என்று கருதினாலும், உயித்தெழுதல் வரைக்கும் அல்லாமல் தலையும், சரீரமுமாகிய கிறிஸ்து முழுவதுமாக மகிமைப்படும் வரைக்கும், வார்த்தையின் முழு அர்த்தத்தில் அது ஸ்தாபிக்கப்படாது இருக்கும். அதுவரைக்கும், வல்லமையிலும் கர்த்தத்துவத்திலும் இராஜ்ஜியம் முற்றிலுமாக வருவதில்லை என்று அறிகிறோம்.

16. நீங்கள் இந்த அப்பத்தை (பஸ்காவை) புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை (உங்கள் நம்பிக்கையாக) தெரிவிக்கிறீர்கள். என்று அப்போஸ்தலன் சொல்லுகிறதில், கிறிஸ்துவின் வருகை என்ற கருத்தில் தன்னுடைய சபை அல்லது இராஜ்ஜியம் (விண்ணரசு) முற்றிலுமாக உயர்த்தப்படுவதையும் சேர்த்து அவர் கருதியிருந்தார் என்று நாம் எவ்வாறு தெளிவாக அறியலாம்? நம்முடைய கர்த்தர்

ஞாபக விருந்தை ஸ்தாபிக்கும் சந்தர்ப்பத்தில் சொன்ன அவருடைய சொந்த வார்த்தைகளிலுருந்து அறியலாம். "இந்த திராட்சைப்பழ இரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் இராஜ்ஜியத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதை பானம் பண்ணுவதில்லை" என்று உங்களுக்கு சொல்லுகிறேன். (மத் 26:29) அதன்படி இராஜ்ஜியம் மகிமைபடுத்துவது இந்த அடையாளத்தின் முடிவு என்ற கருத்தை அறிகிறோம். ஆதலால் கிறிஸ்துவின் இராஜ்ஜியம் முற்றுலும் மகிமையோடு உயர்த்தப்படும் காலம் வரை இதை அனுசரிக்கலாம்.

17. நம்முடைய கர்த்தரின் மரணம்தான் மீட்கும் பொருளின் கிரயம் என்று நம்புகிற எல்லோரும் அதனை அறிக்கையிட, அதாவது தங்களுடைய எல்லா நம்பிக்கைக்கும் அதுவே ஆதாரமானதென்று தெரிவிக்க தகுதியான சமயம் ஒன்று இருக்குமானால் அது இந்த நேரமே. அதாவது தேவனுடைய வார்த்தையின் அஸ்திவாரமான இந்த போதனையை இழிவு படுத்துகிற, திரித்துக் கூறப்படுகிற தற்காலமே தகுதியான காலம் என்று நிச்சயமாக அறியலாம்.

**இந்த சிலாக்கியத்தை உயர்வாக மதித்தல்:**

18. ஆண்டுதோறும் கிடைக்ககிற இந்த சிலாக்கியத்தை எந்த காரணத்தை கொண்டும் யாரும் அசட்டை செய்யவேண்டாமென்று அழுத்திக்கூறுகிறோம். இந்த ஆசரிப்பில் ஒரு விசேஷமான ஆசீர்வாதம் இருக்கிறது. உங்களில் யாராவது அதைரியப்பட்டால், நீதிமனக்கப்படுதலை புதிதாக பெறுவதற்காகவும் உங்களின் பிரதிஷ்டையின் மதிப்பை சரியாக உணர்ந்து புதுப்பித்துக் கொள்ளுவதற்க்காகவும், கர்த்தரிடத்தில் கேட்டு, அப்பதில் பங்கு கொள்ள செய்யுங்கள்.

19. இவ்விதமாக ஏற்றுக்கொளள்ளப்பட்டு உயர்வாக மதிக்கப்பட்டாலன்றி, ஞாபகார்த்த ஆசரிப்பு அர்த்தமற்றதாகவோ அல்லது ஒருவரை முன்னிலும் மோசமான நிலைக்கு கொண்டு செல்லுகிறதாகவோ இருக்கும் என்பதை மறவாதிருப்போமாக. பாவ உணர்ச்சியோ அல்லது

சிரத்தை இன்மையோ அல்லது அபாத்திரரென்ற உணர்ச்சியோ, இவைகளில் ஒன்றும் இதனை ஆசரிக்க உங்களை தடை செய்யாமலிருப்பதாக. உங்களுடைய எல்லாக் குற்றங்களையும் தேவனிடம் அறிக்கையிடுங்கள்.உங்களுக்கு எதிராகச் செய்திருக்கும் குற்றங்களை அவர்கள் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் கவலைப்படவேண்டாம். நீங்கள் அநியாயம் செய்திருக்கிற உங்கள் சகோதிரரிடத்திற்கோ அல்லது வேறு யாரிடத்திற்கோ சென்று குற்றங்களை முழுவதுமாய் ஒப்புக்கொள்ளுங்கள். உங்களுடைய கர்த்தரோடும், கூடுமானவரை எல்லோ மனிதரோடும் ஒப்புரவாகி, பின்பு புசியுங்கள். இப்பொழுதோ அல்லது "ஏற்றவேளையில்" பிறகோ ஏற்றுக்கொள்ளுகிற எல்லோருக்கும் தேவன் கொடுத்திருக்கிற விருந்தில் பங்கு கொள்ளுங்கள்.

20. இவ்விதமாக இருதயத்தை ஆராய்ந்து அதைத் தூய்மையாக்குவது யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட பஸ்கா ஆசரிப்பில் அடையாளமாகக் காட்டப்பட்டிருக்கறது.பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாமிசத்தை புசிக்க கூடிவருவதற்கு முன்பு யூதர்கள் தங்களுடைய வாசஸ்தலங்களிலெல்லாம் கெட்டுப்போன ரொட்டித்துண்டு, மற்றும் பொருட்களை தேடி கண்டெடுத்து அக்கினியில் சுட்டெரித்துப்போட்டார்கள். அது எதற்கு அடையாளமாக இருந்ததோ அதை நாம் நிறைவேற்றுவோமாக. கோபம், பகை, பொறாமை, சண்டை ஆகிவற்றை கொண்ட "புளித்த மாவைப் புறம்பே கழித்துப் போடுவோமாக". (1 கொரி 5:7,8)

21. இந்த வகையான பாவத்தின் புளித்த மாவை அழித்தாலன்றி முற்றிலுமாகக் கழித்துப்போட முடியாது என்பதை ஞாபகத்தில் வைப்போமாக. அன்பு மாத்திரமே அதை அழித்து எரிக்கக்கூடும். இந்த அன்பு தெய்வீக அன்பு. இந்த அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருந்தால், அது கோபத்தை அழித்துப்போடும். பொறாமை, வெறுப்பு, கோபம், தூஷணம் போன்ற எதிரான குணத்தின் எல்லாவற்றையும் அழித்துப்போடும். இவை எல்லாவற்றையும்

கழித்துப் போட்டு, கிறிஸ்துவை தரித்துக்கொண்டு, அவருடைய ஆவியால் நிரப்பப்பட்டிருங்கள் என்று அப்போஸ்தலன் ஏவுகிறார்.

22. அதைரியப்படாதிருங்கள். ஆண்டவருடைய உதவியின்றி நீங்களே ஒருபொழுதும் பரிசைப்பெற முடியாது என்கிற உண்மையை அதிகமாக மதித்து, பாடத்தை கற்றுக்கொண்டு புதுத் தீர்மானங்களோடு திரும்பவும் துவங்குங்கள். இதை நம்மைவிட அதிகமாக அவர் அறிந்து இருக்கிறார். ஆகையால் அவர் சொல்லுகிறார், "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது". நம்முடைய தேவையின் காரணமாகவே பிதா இவ்வாறாக நமக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். ஜெயங்கொண்டவர்களின் வகுப்பாராக இருக்க மிகவும் விரும்புகிற, அதற்காக கஷ்டப்பட்டு முயற்சி செய்கிற எல்லோருக்கும் ஆண்டவர் கொடுக்கிற புத்திமதி, "திடமனதாயிருங்கள்".

**உங்கள் எதிராளியாகிய பிசாசு:**

23. இந்தச் சமயத்தில் சோதனைகள் முக்கியமாக அனுமதிக்கப்படுகின்றன. "கசப்பான வேர்கள்" எப்பொழுதும் முளைத்து வளருகிறதாகக் காணப்படினும் இந்த சமயத்தில் அது பத்து மடங்காக வளருகிறது. நாம் சீஷர்களாயிருக்கிறோம். என்பதற்கு முடிவான சோதனை அறிவு அல்ல, ஆனால் அன்பு என்பதை நாம் ஞாபகத்தில் வைப்போமாக. "நான் உங்களில் அன்பாய் இருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். (யோவா 13:34)சீஷர்களிடத்தில் போதுமான அன்பு இல்லாததினால் இராஜ்ஜியத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்கிற வாக்குவாதம் அவர்களுக்குள் உண்டாயிற்று. ஒருவருக்கொருவர் பணிவுடன் நடக்கக்கூடாதளவுக்கு அவர்கள் அவ்வளவு பிடிவாதமாய் இருந்ததினால் எஜமானுடைய பாதங்களைக் கூட கழுவ அவர்கள் தவறிவிட்டார்கள். இதனால், இழிந்த காரியங்களிலும் கூட எல்லோருக்கும் ஊழியக்காரனாக ஒரு சந்தர்ப்பத்தை அவருக்குக் கொடுத்தார்கள். கர்த்தருடைய ஆவி

அவர்களிடம் இல்லாததினாலே தவறான ஆவியை உடையவர்களாயிருந்தார்கள். அந்த ஆவி சாத்தானுக்கு இடமளிக்கவும், கர்த்தரை காட்டிக் கொடுக்க யூதாசையும், மறுதலிக்க பேதுருவையும் நடத்தினது.

24. நாம் சோதனைக்குட்படாதபடி நம்மையே கவனிப்போமாக. விழித்திருந்து ஜெபம் செய்வோமாக. மிகவும் தாழ்மையுடனும், அன்புடனும் நடந்துகொள்வோமாக. அக்காலத்தைவிட இக்காலத்தில் நம்முடைய பெரிய எதிராளி, கர்த்தரை பின்பற்றுபவர்களுக்குத் தீங்குசெய்யவும், அவர்களை சிக்கவைக்கவும், தவறு செய்யவைக்கவும் அதிக சுறுசுறுப்புள்ளவனாயிருக்கிறான். நம்முடைய பாவங்களுக்காய் மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களுக்காகவவும் தேவ நீதியை திருப்தி பண்ணுகிற அவருடைய விலையேறப்பேற்ற இரத்தத்திலுள்ள (அவருடைய பலியிடப்பட்ட ஜீவனிலுள்ள) விசுவாசத்தின் நம்பிக்கையை உறுதியாய் பற்றிக் கொண்டிருப்போமாக. "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிராரே, ஆதலால் பண்டிகையை அசரிக்கக் கடவோம்" என்கிற இந்த பெரிய சத்தியத்தை அறிக்கையிடுவதில், முன்பு எப்பொழுதும் இருந்ததைவிட அதிக ஆர்வமுள்ளவர்களாக நாம் இருப்போமாக.

**தேவனுடைய வார்த்தையே சத்தியம்:**

25. நாம் எல்லோரும் விழுந்துபோனவர்களென்றும் தெய்வீக பிரமணத்துக்கும், தண்டனைக்கும் ஏற்ற ஒப்புரவாதலுக்கும், இழந்துபோனதை மறுபடியும் பெறுவதற்கும், நம்முடைய பாவங்களுக்க்காக முழு சரியான ஒத்த கிரயம் அல்லது ஈடுபலி கொடுக்கப்பட்டது என்றும் ஏற்றுக்கொள்வோமாக. வேறு எந்த வழியிலும் அவர் நீதியுள்ளவரும் பாவிகளை நீதிமான்களாக ஆக்கிறவருமாக ஆகமுடியாது என்றும் ஏற்றுக்கொள்வோமாக. தேவனுடைய வார்த்தையில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிற இந்த சத்தியங்களை மறுபடியும் ஏற்றுக்கொள்வோமாக. அதன்படி எல்லா பயனற்ற தத்துவங்களையும் நீக்கிவிடுவோமாக. அந்த பெரிய

எதிராளியால் பற்பல வழிகளில் தப்பான உபதேசங்களில் சிக்கியிருக்கிற எல்லோருக்கும் புத்திக்கூறுவது நன்றியாயிருக்கும். நம்முடைய கர்த்தராகிய இயேசு, தேவ ஆட்டுக்குட்டியாக நம்முடைய பாவங்களுக்குரிய முழு தண்டனையையும் தன்னுடைய சொந்த சரீரத்தில் சிலுவை மரத்தில் சுமந்தார். எல்லோருக்குமாகவும் அவர் மீட்கும் பொருளை கொடுத்தார் என்ற உண்மையை நாம் கண்டுகொள்வோமாக.

26. இதன் தத்துவம் மிகவும் தெளிவாக இருக்கிறது. ஆனால் சிலரால் இதை புரிந்து கொள்ள முடியவில்லை. இப்படிப்பட்டவர்கள் இந்த உண்மையை புரிந்துகொண்டு கர்த்தரிடத்திற்குத் திரும்புவார்களாக. அவர் மன்னிப்பார். கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய எல்லா கிருபையின் அஸ்திவாரத்தையும் உணர்ந்து கொள்வதற்காகவும் ஆவியின் நடத்துதலுக்காகவும், கண்களுக்கு கலிக்கம் போடவும் வேண்டுவார்களாக. இவ்விதமாக இயேசுவின் பிடிக்கப்பட்ட சரீரத்தையும் சிந்தப்பட்ட இரத்தத்தையும் ஏற்றுக்கொள்வார்களாக. அவருடைய பலி தங்களுடைய பாவங்களுக்காக செலுத்தப்பட்டதென்றும், சிந்தப்பட்ட இரத்தம் (கொடுக்கப்பட்ட ஜீவன்) எல்லோருக்காகவும் மன்னிப்பை முத்திரையிடுகிறதென்றும் உணர்வார்களாக. அவர்கள் சரீரத்தின் மிகப்பெரிய இந்தச் சம்பவத்தை நமது பாவங்களுக்காக தேவனுடைய பிரிய குமாரனுடைய விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தப்பட்ட ஜீவனின் பலியை, ஞாபகார்த்தமாக கொண்டாடுவார்களாக.

27. இருந்தபோதிலும், முழுமனதுடன் அறிந்த தெளிக்கப்பட்டிருக்கிற இரத்தத்தின் இடத்திலிருந்து போய்விட்டவர்களை, வழியும் சத்தியமும் ஜீவனுமான அவரண்டைக்கு திருப்புவதில், இந்த வார்த்தைகளும் வெற்றிபெறாது. அவர்களுக்கு பஸ்கா கிடையாது. "அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்". (எபி 6:4-10, 10:26-30)

28. மீட்கும் பொருளின் தத்துவத்தை முற்றிலுமாக உயர்வாக மதியாமல், கடந்த நாட்களில் அநேகர் கர்த்தருடைய சரீரம் , இரத்தம் இவைகளுக்கு அடையாளமான அப்பத்திலும், பாத்திரத்திலும் பங்கு கொண்டிருக்கிறார்கள். இருந்தபோதும், நம்முடைய இரட்சகருடைய மரணம் நம்மை, குற்றங்களை களைந்து தூய்மைபடுத்தி அதன் தண்டனையிலுருந்து விடுவித்திருக்கிறது என்கிற உண்மையை பக்தியோடு மதித்து பங்கு கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் முட்டாள்தனமான தப்பான உபதேசங்களினால் சத்தியத்தின் தெளிவான தத்துவத்தை பகுத்து அறியாவிட்டாலும், ஞாபகார்த்தத்தின் உண்மையான முக்கியத்துவத்தைக் கண்டு கொண்டிருக்கிறார்கள்.

29. கர்த்தருக்கும் சத்தியத்துக்கும் அறியாமல் தவறு செய்கிற சகோதர சகோதரிகளுக்கும் நாங்கள் ஊழியஞ்செய்ய வேண்டுமென்ற உண்மையான உள்ளெண்ணத்தின் காரணமாகவே பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகளை சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

**எவ்வாறு பங்கு கொள்வது:**

30. உங்களைத் தவிர அருகாமையிலிருக்கிற தேவனுக்கு பிரதிஷ்டை செத்திருக்கிற ஜனங்களை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் சத்தியத்தை அறிந்த பின்பு, கர்த்தர் பேரிலும் சத்தியத்தின் பேரிலுமுள்ள அன்பினால் அவர்களுக்கு சத்தியத்தை கொடுத்திருக்கலாம். இப்படிப்பட்டவர்களோடு ஐக்கியம் வைத்துக்கொள்ள கூடுமானால் ஞாபகார்த்த இராபோஜனத்தில் உங்களோடு சேர அவர்களை அழைக்கலாம்.உங்கள் மேல் ஆக்கினையை வரவழைத்து கொள்ளாதபடி, அவர்கள் மீட்கும் பொருளை (ஈடு பலியை) மறுதலிக்கிறவர்களாயிருந்தால் அப்படிப்பட்டவர்களை அழைக்கவேண்டாம். கிறிஸ்துவோடுவுள்ள ஐக்கியத்தின் ஆவியில்லாதக் கூட்டத்தையல்ல, ஆனால் ஞாபகார்த்தத்தின் ஆவியில் உங்களோடு சேரக்கூடிய சிலரை நீங்கள் சந்தித்து அவர்களை அழைக்கலாம்.

31. ஞாபகார்த்த ஆராதனை மிகவும் எளிய முறையில் நடத்தப்பட வேண்டும். அது முக்கியமாக ஐக்கியத்திற்கு உற்றகாலம். இதற்க்காக ஆராதனையில் மத்தியில் அமைதி நிலைத்திருப்பது நல்லது. அப்போது கடந்த காலத்திலும் தற்போதும் அவர் காட்டியிருக்கிற அன்பை உணர்வதிலும், மரண பரியந்தம் அவருக்கு உண்மையுள்ள சீடராக இருப்பபேன் என்கிற வாக்குறுதியை புதுப்பிப்பதிலும் எல்லாருடைய இருதயமும் எஜமானிடம் ஐக்கியத்தில் நெருங்கி வரக்கூடும். கடந்த ஆண்டில் வாக்குறுதியை எவ்வாறு நிறைவேற்றினோம் அல்லது மீறினோம் என்பதை யோசனை செய்து, எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோமோ, அந்தப் பந்தயப் பொருளை அடையப் பொறுமையோடு ஓட மறுபடியும் உறுதி கொள்ளுவோமாக.

32. அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு புறப்பட்டுப்போனார்கள் என்று சொல்லியிருக்கிற பிரகாரம், நாமும் அப்படியே செய்வோமாக. இருதயத்தின் நிறைவோடே நாம் நமது இல்லங்களுக்குச் செல்வோமாக. இந்தச் சந்தர்ப்பத்தில், கூட்டத்திற்கு பிறகுத் தெரிவிக்கிற வாழ்த்துதல்களையும், மற்ற பொதுவான சம்பாஷனைகளையும் கைவிடுமாறு ஆலோசனை கூறுகிறோம்.

33. இவ்விதமாக நாம் கர்த்தரோடு கொண்டுள்ள ஐக்கியத்தை நீடிக்கச் செய்வோமாக. அடுத்த நாள் முழுவதும் அவருடைய பார்வையில் அவரை நிறுத்துங்கள். குற்றமற்ற அவருக்கு எதிராக ஜனங்கள் கிளப்பின இரைச்சலை கேளுங்கள். எருசலேமிலுள்ள ஆசாரியர்கள் ஜனங்களை ஜனங்களை தூண்டிவிட்டதை பாருங்கள். அவரை பிலாத்து, ஏரோது, போர்சேவகர் முன்னிலையில் பாருங்கள். ஒரு குற்றவாளியைப் போல சிலுவையில் அறையப்பட்டு இரட்சித்தான். தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ள திராணியில்லை என்று நிந்திக்கப்பட்டதைப் பாருங்கள்.

34. அவர் தன்னை காப்பாற்றியிருக்கக்கூடும். பன்னிரெண்டு லேகியோனுக்கு அதிகமான தூதர்களை அவர் பெற்று தன்னை

பாதுகாத்து விடுவித்துக் கொண்டிருக்கக்கூடும். நமக்காக மரிப்பதற்கு பதிலாக தன்னுடைய எதிரிகளையும் தூஷிக்கிறவர்களையும் அவர் அழித்திருக்கக்கூடும் என்பதையும் எண்ணிப்பாருங்கள். நம்முடைய உயிர்தெழுதலுக்கும் நித்திய ஜீவனுக்கும் உரிய நம்பிக்கை, மீட்கும் பொருளாக அவர் தன்னை ஒப்புக்கொடுத்ததில் சார்ந்திருக்கிறது என்கிற இவைகளையெல்லாம் ஞாபகப்படுத்துங்கள்.

**ஞாபகார்த்தத்தின் மூலமாகக் கிடைக்கிற ஆசீர்வாதங்கள்:**

35. கபடமற்ற, மிகுந்த ஆவலுடைய இருதயத்தோடு ஞாபகார்த்தத்தை கொண்டாடுகிறவர்கள் பெரிய ஆறுதல் அளிக்கக்கூடிய ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். நமக்காகவும் எல்லோருக்காகவும் அவர் காட்டின அன்பை ஆழ்ந்து யோசனை செய்யும்போது, அது அவர்களுடைய சீடர்களாகிய நாம் சிலுவையின் போர்ச்சேவகராக அதிகதிகமாக கஷ்டத்தை சகிக்க நம்மை நிச்சயமாகவே பலப்படுத்தும். நம்முடைய சோதனைக்காகவும் ஒழுங்கிற்காகவும் அனுமதிக்கப்படுகிற இலேசான உபத்திரவங்களுக்கடியில் நம்முடைய மனதில் நாம் சோர்ந்துபோகாதபடி, அவருக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள். இந்த உபத்திரவங்களை உண்மையோடு சகித்தால், அது நமக்கு மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்கும்.

36. இந்த பலியை கொண்டாடுகிறவர்களும், அதே இரக்கமுள்ள கர்த்தரை நினைக்கிறவர்களும், அதே பெரிய அருமையான வாக்குத்தங்களினால் தேற்றப்பட்டு உற்சாகப்படுத்தப்படுகிறவர்களும், இனிமேல் அதே இரக்கமுள்ள தேவனுடைய கிருபையினாலே முன்பு செய்ததை விட அதிக ஊழியஞ்செய்ய ஒப்புக்கொடுக்கிறவர்களும், அவருடைய ஊழியத்திலும், ஜனங்களுடைய ஊழியத்திலும் பெரிய தியாகங்களை செய்ய உறுதி கொள்ளுகிறவர்களும், நம்மைப்போல அருமையான விசுவாசத்தைப் பெற்றுள்ளவர்களும் உலகில் எல்லா பாகங்களிலும்

இருக்கிறார்கள் என்பதை உணரும்போது அது நமக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்குகிறது.

37. வழக்கம்போல தேவனுடைய ஜனங்கள் ஒவ்வரு வருடமும் "குறித்தநாளில்" கூடி சாயங்காலம் அந்திசாய்ந்த பின்பு நம்முடைய கர்த்தருடைய ஞாபகார்த்த இராபோஜனத்தில் பங்குகொள்ள அழைக்கப்படுகிறார்கள். எந்த சபையை சேர்ந்தவர்களானாலும், ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்றாலும் பெற்றிராவிட்டாலும் சரி, இயேசுவின் ஒப்புரவாகுதலின் பலியிலே விசுவாசம் வைத்திருக்கிற எல்லோரும் இந்த ஞாபகார்த்தத்தில் பங்கு கொள்ள அழைக்கப்படுகிறார்கள், கர்த்தருடைய பந்தி எல்லோருக்காகவும் உள்ளது. **அந்த நாள் உங்களுக்கு நினைவுகூருதலான நாளாய் இருக்கக்கடவது; அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக; அதை உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக்கடவீர்கள். (யாத் 12:14)**

## ஞாபகார்த்தத்தில் யார் பங்குகொள்ளலாம் ?

43. கர்த்தருடைய இராபோஜனம் உலகத்தாருக்கல்ல, பெயரளவிலுள்ள விசுவாசிகளுக்குமல்ல, ஆனால் கிறிஸ்துவை தங்களுடைய பாவங்களை சுமந்து தீர்த்தவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு ஏற்றுக்கொண்டு, அவருக்கும் அவருடைய ஊழியத்துக்கும் தங்களை பிரதிஷ்டை செய்திருக்கிறவர்களுக்கு மாத்திரமே உரியது. யார் பங்குகொள்ளலாம் யார் பங்குகொள்ளக்கூடாது என்று தீர்மானிக்க நமக்கோ அல்லது வேறு எந்த மனிதனுக்கோ அல்லது மனிதரின் குழுவுக்கோ ஆதிகாரம் கிடையாது. அப்பத்தை புசிப்பதற்கும் பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கும் என்ன தகுதி இருக்கவேண்டுமென்பதை கர்த்தருடைய வார்த்தையால் சுட்டிக் காட்டுவதே நமது கடமையாயிருக்கிறது. நாம் அப்போஸ்தலர் சொன்ன பிரகாரம் எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து,

பிறகு தகுதியுள்ளவன் என்று கண்டால் அதிலே சேரக்கடவன் என்று சொல்லவேண்டும். (1கொ 11:28)

44. இருண்ட யூகங்களின் தவறான உபதேசங்களிலிருந்து இப்போது தேவனுடைய ஜனங்கள் வெளியேறுகிறதினால் ஞாபகார்த்த இராபோஜனத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடியவர்களாகவும், தங்களை செம்மையாக சோதித்தறியக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகையால் ஒவ்வொருவரும் கீழ்கண்டவாறு தன்னையே கேள்வி கேட்க வேண்டும்.

45. (1) மனுக்குலத்தின் ஒரு அங்கத்தினன் என்ற முறையில் ஆதாம் பாவத்தின் காரணமாய் எல்லோருக்கும் வந்த மரண ஆக்கினைக்கு உட்பட்டவனாயிருந்தேன் என்று நான் விசுவாசிக்கிறேனா ?

(2) பாவம் மரணம் இவைகளின் ஆக்கினையிலிருந்து தப்பித்துக் கொள்ள எனது ஒரே நம்பிக்கை, மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவினுடைய மீட்கும் பலியினாலே ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் விசுவாசிக்கிறேனா ?

(3) நமக்கு பதிலாக அவர் தனது ஆத்துமாவை மரணத்திலூற்றி, தம்மை குற்றநிவாரணப் பலியாக ஒப்புக்கொடுத்து, தம்மையே (தன்னுடைய மாம்சத்தை, இரத்தத்தை, மனுஷீகத்தை) என்னுடைய மீட்கும் பொருள் கிரயமாகக் கொடுத்தார் என்று நான் விசுவாசிக்கிறேனா ? (ஏசா 53:10-12)

(4) அவர் யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றபோது ஆரம்பமாகி, கல்வாரியில் அவர் மரித்தபோது முடிந்த அவரது பிரதிஷ்டை மனுஷராகத் தம்மையே மரணபரியந்தம் பலியாகக் கொடுத்ததில் நிறைவேற்றப்பட்டது என்பதை நான் கண்டுகொள்ளுகிறேனா ?

(5) அவர் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்ததால், அந்த நியாயப்பிரமாணத்தின் நீதியினிமித்தம் பெற்றுக்கொண்ட உரிமைகளை விழுந்துபோய் செத்துக்கொண்டே இருக்கிற மனுக்குலத்திற்கு, தமது அதே பலியினால் மரண சாசனமாக ஏற்படுத்தி இருக்கிறார் என்பதையும், புது உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்பட்ட ஆசீர்வாதங்களை யார் யார் ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதையும் நான் கண்டு கொண்டிருக்கிறேனா ?

(6) இவ்விதமாக பலியிடப்பட்ட அவருடைய மாம்சமும் இரத்தமும் கிரயத்துக்கு வாங்கிக்கொண்ட அந்த ஆசீர்வாதங்களுக்கும் தயைக்கும் அடையாளமாக இருக்கிறது என்பதை நான் கண்டு கொள்கிறேனா ?

(7) அவருடைய மாம்சத்துக்கும் இரத்தத்துக்கும் அடையாளமான அப்பதிலும் பாத்திரத்திலும் பங்கு கொள்ளுவது அவருடைய மாம்சமும் இரத்தமும் எனக்காகவும் எல்லோருக்காகவும் கிரயமாகக் கொண்ட அந்த தயையையும் ஆசீர்வாதங்களையும் நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன் என்பதை குறிக்கின்றன என்று நான் கண்டு கொள்ளுகிறேனா?

(8) இவ்விதமாக ஞாபகப்படுத்தியிருக்கும் மீட்கும் பொருளை நான் முழு மனதுடன் ஏற்றுக்கொண்டிருந்தேனாலால் என்னை முற்றிலுமாக (அந்த மீட்கும் பொருளின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமாக நீதிமானாகப்பட்ட என்னுடைய மாம்சமும் இரத்தமும்) அவரோடு பாடுபடவும் அவரோடு மரித்திருக்கவும், கர்த்தருக்கு தத்தம் செய்திருக்கிறேனா ?

3. இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நாம் "ஆம்" என்று பதிலை கொடுப்போமானால் , கர்த்தருடைய சரீரத்தை தெளிவாகவும், முற்றிலுமாகவும் கண்டுகொண்டிருக்கிறோம். அவரூடைய

புண்ணியமுள்ள பலிக்கு நன்மதிப்பு கொடுக்கிறோம், அவரை புசிக்கலாம், புசிக்க வேண்டும், "நீங்கள் எல்லோரும் வாங்கிப் புசியுங்கள்".

46. பாவத்திற்கும், பாவிகளுக்காகவும் மீட்கும் பொருள் தேவைப்பட்டது என்பதையும், அது கொடுக்கப்பட்டது என்பதையும் நிராகரிக்கிறவர்களும், கிறிஸ்துவின் புண்ணியத்தில் பங்கு கொள்ள அவசியமில்லை என்று எண்ணுகிறவர்களும், ஒருவருடைய புண்ணியம் மற்றவருக்குச் சாட்டப்படலாம் என்பதை நிராகரிக்கிறவர்களும், கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை எறிந்துவிட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு, தங்களின் சொந்த நீதியின் அழுக்கான கந்தையில் சந்தோஷமாகவும், சுயேச்சையாகவும் இருக்கிறதாக உணர்கிறவர்களுக்கும், தங்களை முன்பு பரிசுத்தஞ்செய்த அந்த விலையேறப்பெற்ற இரத்தத்தை அசுத்தமென்றோ அல்லது சாதாரணமானதென்றோ எண்ணுகிறவர்களுக்கும் தங்களுக்கு நம்பிக்கையில்லாத அதை ஞாபகார்த்தமாகக் கொண்டாட வேண்டாம் என்று புத்தி கூறுகிறோம். ஏனென்றால், தங்களுடைய அவிசுவாசத்தோடே கபடத்தையும் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள், ஞாபகார்த்தத்தில் பங்குகொள்வார்களேயானால், அவர்கள் தங்கள் மீதும் தங்களுடைய மீட்கும் பொருளை மறுதலிக்கும் கோட்பாட்டின் மேலும் ஆக்கினையை வரவழைத்துக் கொள்ளுவார்கள்.